**STARTING TIME 11.52 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 41/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 18.11.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **சுப்பிரமணி** Father's Name : **குப்புசாமி**

Address : **கதவு எண். 76/1, அன்னதானசத்திரம் ரோடு,**
**கொண்டபாளையம் கிராமம், சோளிங்கர் வட்டம்,**
**இராணிப்பேட்டை மாவட்டம்.**

Age : 61

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் மனைவி என்றால், சரிதான். வா.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய சமயத்தில் 1–ம் பிரதிவாதி பாபு வெளிநாட்டில் இருந்தார் என்றால், சரிதான். தற்போதும் அவர் வெளிநாட்டில் தான் உள்ளார் என்றால், சரிதான். எனவே, அவர் 2–ம் பிரதிவாதியின் பெயரில் பொது அதிகாரம் கொடுத்து 2–ம் பிரதிவாதி 1–ம் பிரதிவாதிக்காகவும், தனக்காகவும் வழக்கை நடத்தி வருகிறார் என்றால், சரிதான்.

2. நான் பிரேக்ஸ் இந்தியா லிமிடெட் கம்பெனியில் வேலை செய்து ஓய்வு பெற்றேனா என்றால், இல்லை. நான் எங்கு வேலை செய்து வந்தேன் என்றால், வெளியில் எங்கும் வேலை செய்தது இல்லை, விவசாயம் தான் பார்த்து

வருகிறேன். எனக்கு எவ்வளவு நிலம் சொந்தமாக உள்ளது என்றால், 2 ஏக்கர் உள்ளது. அந்த 2 ஏக்கர் நிலத்தில் இருந்து வந்த வருமானத்தைக் கொண்டு தான் பிரதிவாதிகளுக்கு ரூ.3 லட்சம் கடனாக கொடுத்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம். எனக்கு விவசாயம் தவிர வேறு வருமானம் உள்ளதா என்றால், இல்லை.

3. நான் பிரதிவாதிகளுக்கு எந்த தேதியில் பணம் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால், 20.11.2020 அன்று கொடுத்தேன். எங்கு வைத்து பணம் கொடுத்தேன் என்றால், எனது வீட்டிற்கே வந்து பிரதிவாதிகள் பணம் வாங்கி சென்றார்கள். கடனுறுதி சீட்டை யார் எழுதியது என்றால், 1–ம் பிரதிவாதியே டைப் செய்து எடுத்து வந்தார். அதற்கான முத்திரை தாளை கடனுறுதி சீட்டில் கையெழுத்து செய்த அதே தேதியிலேயே வாங்கினாரா என்றால், இரண்டு நாட்களுக்கு முன்பே வாங்கியிருந்தார். கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்த எத்தனை நாட்களுக்கு முன்பு பணத்தை கடனாக கேட்டார் என்றால், ஒரு வாரம் முன்பு கேட்டார். பணம் கேட்கும் போது யார், யார் வந்தார்கள் என்றால், பிரதிவாதிகள் இருவரும் மட்டும் தான் வந்தார்கள், வேறு யாரும் வரவில்லை.

4. கடனுறுதி சீட்டை தட்டச்சு செய்த சமயத்தில் நான் உடன் சென்றேனா என்றால், சென்றேன். எங்கு வைத்து கடனுறுதி சீட்டை தட்டச்சு செய்யப்பட்டது என்றால், சோளிங்கர் போஸ்ட் ஆபிஸ் தெரு கடைசில் உள்ள கடையில் தட்டச்சு செய்யப்பட்டது. தட்டச்சு செய்த சமயத்தில் பாண்டில் சாட்சி கையெழுத்து செய்தவர் உடன் வந்தாரா என்றால், இல்லை. தட்டச்சு செய்தவர் பெயர் எழுதி கையெழுத்து செய்துள்ளாரா என்றால், இல்லை.

5. சாதாரணமாக பாண்டு தயாரிக்கும் போது தட்டச்சு செய்தவர் யார் என எழுதுவது வழக்கம் என்றால், சரிதான். பாண்டை தட்டச்சு செய்துக் கொடுத்தவர் தற்போது இருக்கிறாரா என்று தெரியுமா என்றால், அது பற்றி தெரியாது. அந்த கடைக்கு சென்று பார்த்தால் அவர் இருக்கிறாரா இல்லையா என்று தெரியும் என்றால், சரிதான். தட்டச்சு செய்த சமயத்தில் நான் உடனிருந்தேனா என்றால்,

கடைக்கு வெளியில் உட்கார்த்திருந்தேன்.

6. பாண்டை தட்டச்சு செய்த போது அதிலுள்ள விவரங்களை யார் சொன்னது என்றால், 1–ம் பிரதிவாதி பாபு சொன்னார். பிரதிவாதிகளின் விலாசம், ஆதார் எண் உள்ளிட்ட விவரங்களை யார் சொன்னது என்றால், 1–ம் பிரதிவாதியே சொன்னார். எனது விலாசத்தை யார் சொன்னது என்றால், நான் தான் சொன்னேன். எனது விலாசத்தை கொடுத்த போது எனது ஆதார் எண்ணை சொன்னேனா என்றால், எனது ஆதார் அட்டையை கொடுத்தேன், அதை பார்த்து ஆதார் எண்ணை தட்டச்சு செய்தார்கள்.

7. கடனுறுதி சீட்டை எத்தனை மணிக்கு தயாரிக்கப்பட்டது என்றால், காலை 11.00 மணிக்கு தயாரிக்கப்பட்டது. எத்தனை மணிக்கு பணம் கொடுத்தேன் என்றால், 12.00 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தேன். பணம் வாங்கும் போதும் 1, 2 பிரதிவாதிகள் ஒன்றாக இருந்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம். பணத்தை வங்கியில் இருந்து எடுத்துக் கொடுத்தேனா அல்லது கையில் இருந்து கொடுத்தேனா என்றால், கையில் இருந்து தான் கொடுத்தேன்.

8. பிரதிவாதிகளுக்கு கடனாக கொடுத்த ரூ.3 லட்சம், எனது நிலத்தில் என்ன பயிர் செய்து வந்த வருமானம் மூலம் கிடைத்து என்றால், ஒரு ஏக்கர் நெல் பயிரும், 1/2 ஏக்கரில் வேர்கடலையும், 40 செண்டில் தோட்ட பயிரும் செய்தேன். எனது நிலத்தில் கிணறு, மின்இணைப்பு உள்ளதா என்றால், உள்ளது. நெல் பயிர் மற்றும் வேர்கடலை அறுவை செய்த வகையில் தான் ரூ.3 லட்சம் கையில் இருந்ததாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

9. இவ்வழக்கின் 1–ம் பிரதிவாதி டி.வி.எஸ். குழும நிறுவனத்தில் வேலை செய்தார் என்றால், சரிதான். பாண்டில் சாட்சி கையெழுத்து செய்தவர் பணத்தை கொடுத்ததையும், பிரதிவாதிகள் சாட்சி கையெழுத்து செய்ததையும் நேரில் பார்த்தாரா என்றால், பார்த்தார். யார் சாட்சி கையெழுத்து செய்தது என்றால், 1–ம் பிரதிவாதியின் உடன் பிறந்த தம்பி ஹரி என்பவர் கையெழுத்து செய்தார். பணம்

கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் அவர்களை தவிர வேறு யார் எனது வீட்டில் இருந்தது என்றால், வேறு யாரும் இல்லை.

10. சாதாரணமாக பணம் கடனாக கொடுக்கும் சமயத்தில் பணம் கொடுப்பவர் தரப்பில் ஒருவரும், பணத்தை வாங்குபவர் தரப்பில் ஒருவரும் சாட்சியாக கையெழுத்து செய்வார்கள் என்றால், சரிதான். தாவா கடனுறுதி சீட்டில் எனது தரப்பில் யாரும் சாட்சி கையெழுத்து செய்தார்களா என்றால், இல்லை, 1–ம் பிரதிவாதி பாபு எனது உறவினர் என்பதால் வேறு யாரிடமும் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை.

11. கடனாக கொடுத்த பணம் விவசாயம் வருமானம் மூலமாக வந்ததாகவும், கடனுறுதி சீட்டை ஒரு இடத்தில் தயாரித்து, பணத்தை ஒரு இடத்தில் கொடுத்து, உறவினர் என்பதால் ஒருவரிடம் மட்டும் சாட்சி கையெழுத்து வாங்கினேன் என்ற விவரத்தை எனது தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால், சரிதான்.

12. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள கையெழுத்துக்கள் 1, 2 பிரதிவாதிகள் கையெழுத்துக்களா என்றால், ஆமாம். வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் உள்ள தேதியில் பிரதிவாதிகள் என் வீட்டிற்கு நேரில் வந்து, பணத்தை கடனாக வாங்கியதாக சொல்வது பொய் என்றால், சரியல்ல. நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்து ஓய்வு பெற்று வந்த பணத்தைக் கொண்டு ஏற்கனவே ரூ.3 லட்சத்தை பிரதிவாதிகளுக்கு மாதம் ரூ.100–க்கு ரூ.2.5 வீதம் வட்டிக்கு கடனாக கொடுத்து வட்டி வாங்கி வந்தேன் என்றால், சரியல்ல, தாவா கடனுக்கு முன்பு வேறு எந்தக் கடனையும் கொடுக்கவில்லை.

13. பிரதிவாதிகள் அவர்களது பதிலுரையில் நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்து ஓய்வு பெற்று வந்த பணத்தைக் கொண்டு ஏற்கனவே ரூ.3 லட்சத்தை பிரதிவாதிகளுக்கு கடனாக கொடுத்ததாக சொல்லியுள்ளார்கள் என்றால், சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு சொல்லியும் நான் எனது பிரமாண

வாக்குமூலத்தில் நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என குறிப்பிட்டு மறுத்து சொல்லவில்லை என்றால், சரிதான். எனது குறுக்கு விசாரணையில் தான் நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்யவில்லை என சொல்கிறேன் என்றால், சரிதான்.

14. தாவா கடனுறுதி சீட்டுக்கு முன்பு நான் பிரதிவாதிகளிடம் கொடுத்த ரூ.3 லட்சத்தை எனது மகளின் திருமண செலவிற்காக வேண்டி பிரதிவாதிகளிடம் திரும்ப கேட்டேன் என்றால், தாவா கடனுறுதி சீட்டு பணத்திற்கு முன்பு நான் பிரதிவாதிகளுக்கு பணம் எதுவும் கடனாக கொடுக்கவும் இல்லை, அதனால் அதை திரும்ப கேட்கவும் இல்லை, ஆனால் தாவா கடனுறுதி சீட்டுக்காக பணத்தை தான் திரும்ப கேட்டேன். தாவா கடனுறுதி சீட்டின் பேரில் பிரதிவாதிகளுக்கு ரூ.3 லட்சத்தை கடனாக கொடுத்ததாக சொல்வது பொய் என்றால், சரியல்ல.

15. பிரதிவாதிகள் ஏற்கனவே என்னிடம் வாங்கிய ரூ.3 லட்சம் கடனில் ரூ.2,40,000/−ஐ திரும்ப கொடுத்துவிட்டார்கள் என்றும், மீதி ரூ.60,000/−ம் மட்டும் தான் கொடுக்க வேண்டும் என்றும், அந்த பணத்தை பிரதிவாதிகள் திருப்பி கொடுக்க வந்த போது, அதிக வட்டி கேட்டு அதற்கு பிரதிவாதிகள் கொடுக்க மறுத்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

16. 20.11.2020 தேதியில் 1, 2 பிரதிவாதிகள் வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றும், அவர்கள் கையெழுத்தை நான் மோசடியாக போட்டு கடனுறுதி சீட்டை தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. மோசடியாக தயாரிக்கப்பட்ட கடனுறுதி சீட்டின் பேரில் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் விசாரணை இல்லை.

YUVARAJ Special Subordinate Judge Digitally signed by YUVARAJ Location: Arakkonam. Date: 2025.11.18 14:51:42 +0530

**ENDING TIME 12.35.P.M.**